# தமிழ் நாட்டில் நூலகப்பணி வளர்ச்சி

## உலகத் தமிழ் மாநாடு வெளியீடு





செய்தி

தமிழ்நாடு பொது நூலக இயக்குநர்


**வே. தில்லைநாயகம்,** எம்.ஏ.,எம்.எல்.எஸ்.,பி.டி.,



வெளியீடு

**திருநெல்வேலி மாவட்ட நூலக அலுவலகம்**

**சனவரி 1981**



தேசிய நூலக வாரவிழாவில்
மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், எம்.ஏ.,பி.எல்.,பி.டி.

# தமிழ் நாட்டில்
# நூலகப்பணி வளர்ச்சி

## 1 அறிமுகம்

### 11 உரிமை

நாம் இருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம்; அதுவும் நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்; கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று நடத்தினோம்; ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நம்மை அடக்கியாண்டு வந்த அந்நியரை வெளியேற்றினோம். 1947 ஆகஸ்ட் 15ம் நாள் நாட்டுரிமை — சுதந்திரம் — பெற்றோம்.

### 12 கடமை

உரிமை வந்தது. உரிமையோடு கடமைகளும் வந்தன. மக்களுக்காக மக்களே மக்களால் நடத்தும் அரசு உருவாகியது. நாட்டு ஆட்சி நல்லமுறையில் நடக்க வேண்டுமானால் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஆட்சிப் பொறுப்பில் பொறுப்பு ஏற்க வேண்டும். இது தானே வந்துவிடாது. எனவே தயாரிக்க வேண்டும். இது எப்படி?

### 13 தயாரிப்பு

இதற்கு நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அறிவு உள்ளவர்களாக — கல்வியறிவு பெற்றவர்களாக — கல்வியறிவு உள்ளவர்களாக — இருக்க வேண்டும். இப்படி இல்லையே நாம் என்று கவலைப் பட்டுக் கொண்டு இருந்தால் காரியம் நடக்காது. கருத்தோடு முயற்சி செய்ய வேண்டும். இதற்கு நாம் என்ன செய்தோம்?

14 பள்ளிக் கல்வி

இதற்காகத்தான் அரசியல் அமைப்புச் சட்டத்திலே — 45ம் பிரிவிலே — கல்வித் திட்டத்தைச் சேர்த்திருக்கிறோம். இதன்படி படிக்கும் வயது வந்த குழந்தை ஒவ்வொன்றும் கட்டாயக் கல்வி பெறும் திட்டம் உள்ளது.

15 புறப்பள்ளிக் கல்வி

பள்ளியிலே படிக்க முடியாதவர்கள் என்ன செய்வது? பள்ளியிலே சேர்ந்தாலும், தொடர்ந்து படிக்க முடியாதவர்கள் என்ன செய்வது? இவர்களுக்கும் கல்வி தரும் முயற்சி தான், முதியோர் கல்வி — சமூகக் கல்வி — தொழிலாளர் கல்வி — உழவர் கல்வி — முறைசாராக் கல்வி எனப்படும் புறப்பள்ளிக் கல்வி (Non Formal Education) என்ற பெயர்களிலே நடந்து வருகிறது.

16 தொடர் கல்வி

பள்ளியில் படித்தவர்கள் — மேல்கல்வி பெற முடியாதவர்கள் — தொடர்கல்வி பெற விரும்புகிறவர்கள் என்ன செய்வது? இவர்களுக்கு உதவியாகத்தான் இன்று அஞ்சல் முறைக் கல்வி, திறந்த பல்கலைக் கழகக் கல்வி போன்ற முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

17 நூலகக் கல்வி

கல்வியறிவு மட்டும் போதாது; பட்டம் பெறும் முயற்சிக்கு கல்வி மட்டும் போதாது; வாழ்நாள் எல்லாம் அறிவு வளர்ச்சிக் கல்வி வேண்டுமானால் என்ன செய்வது? இதற்காகத்தான் மாநிலமளாவிய நூலக இயக்கம் — நாடளாவிய நூலகக் கல்வி இயக்கம் செயல்பட்டு வருகிறது.

18 அமைவு

இந்த முயற்சிகள் எல்லாம் எவ்வாறு மக்களுக்கு ஒருங்கிணைந்து உதவி வருகிறது? இதற்கு தமிழ்நாடு நூலக இயக்கம் எப்படி உதவுகிறது? இதை அறிவார்வம் உள்ள ஒவ்வொருவரும் அறிய விழைவது இயற்கை. இதை வகைப் பிரித்துப் பார்க்கலாம்.

19 வகைகள்

வளர்ந்துவரும் — விரிந்து வரும் — சிறந்துவரும் தமிழ் நாட்டு நூலகப் பணியை எட்டு பிரிவுகளாகக் காணலாம்.

அவையாவன :

1 நூலகச் சட்டம், 5 நூல்கள் அறிமுகம்.
2 தனி நூலகத்துறை, 6 கட்டடங்கள்.
3 நூலகவரி, 7 நூலகப் பணி, மற்றும்
4 நூல்கள் வாங்கல், 8 அர்ப்பணிப்பு.

## 2 நூலகச் சட்டம்

### 21 கடிதச் செலவு

1931 மார்ச்சில் சென்னை மாநில நூலகச் சங்கத்தின் ஆண்டு விழாவில் கலந்து கொண்ட சென்னை மாநில ஆளுநர் சர் ஜார்ஜ் ஸ்டான்லி, நூலகச் சட்ட முயற்சியை வர வேற்றுப் பேசினார்.

இதை ஆதரவாகக் கொண்டு 1933 ஆகஸ்டில் சட்ட சபையில் நூலகச் சட்டப் பகர்ப்பு அறிமுகப் படுத்தப் பட்டது. 1934–ல் பொறுக்குக் குழு அறிக்கை (Select Committee Report) தந்தது.

ஆனால் அந்நாளைய ஆங்கிலேயச் செயலாளர் இதனால் ஏற்படும் கடிதப்போக்குவரத்துச் செலவை நூலகச் சங்கம் தரவேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்தார்! இச் சமயத்தில் சட்டசபை கலைக்கப்பட்டது. முயற்சி முடங் கியது.

### 22 பணம் இல்லை

திரும்ப 1937 அக்டோபரில் நூலகச் சட்டப் பகர்ப்பு திருத்தப்பட்டு சட்டசபையில் கொண்டுவர அனுமதி வேண் டப்பட்டது. இதனால் அதிகமாகப் பணம் செலவழியும் என்று அன்றைய ஆளுநர் லார்டு எர்ஸ்கின் எடுத்துரைத் தார். முயற்சி முடங்கியது இரண்டாம் முறையும்.

### 23 மாற்றுமுறை

திரும்ப 1938ல் திரு. இராஜாஜியைக் கண்டு பேசி நூலகச் சட்டம் கொண்டுவர முயன்றது சென்னை நூலகச் சங்கம். பணமுடையின் காரணமாகவும், அந்நிய ஆட்சி காரண மாகவும் முயற்சி பயன் தரவில்லை.

எனினும் இதற்கு மாற்று முயற்சியாக (1939சூன் 2ம் நாளிட்ட அரசு கல்வி ஆணை எண் 1421ன் படி) பள்ளி நூலகங்களில் பொது மக்கள் படிக்க அனுமதியளிக்கப்பட்டது.

### 24 போர் பிற்காலத் திட்டம்

இரண்டாம் போர் பிற்காலத்திட்ட முயற்சிகளில் ஒன்றாக சென்னை நூலகச் சங்கத் தலைவர் திரு கே.வி. கிருஷ்ண சாமிஅய்யர் நூலகச் சட்டத்தைப் பரிந்துரைத்தார். தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் காரியம் நடக்கவில்லை. காலம் கடந்தது.

### 25 சட்டம் வந்தது

சுதந்திரத்திற்கு முன்னோடியாக இடைக்கால அரசு பொறுப்பேற்றது. பல கல்வி நிறுவனத் தொடர்பாளராயிருந்த திருமிகு அவினாசிலிங்கனார் அவர்கள் கல்வி அமைச்சரானார். நூலக முன்னோடி டாக்டர் அரங்கநாதன் தொடர்பு பெற்றார். நூலகச் சட்ட முயற்சி தொடங்கியது. 1950 ஏப்ரல் முதல்நாள் சென்னை நூலகச் சட்டம் அமுலுக்கு வந்தது.

### 26 பயன்

அதன் விளைவாக அரசின் நேரடிப் பார்வையில் இருந்த சென்னை கன்னிமாரா பொது நூலகம் மாநில மைய நூலகமாக ஆயிற்று. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட மைய நூலகம் நிறுவப்பட்டது. தொடர்ந்து பேரூர்களிலும் சிற்றூர்களிலும் ஏராளமான கிளை நூலகங்கள் நிறுவப்பட்டன.

### 27 பணிமுனைகள்

இப் முறையில் இன்று பணியாற்றும் பணிமுனைகளாவன:

| | |
|---|---|
| மாநில மைய நூலகம் | 1 |
| மாவட்ட மைய நூலகங்கள் | 14 |
| கிளை நூலகங்கள் | 1449 |
| ஆகமொத்தம் | 1464 |

### 28 நீடிப்பு

மேலும் தமிழ்நாட்டோடு இணைந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு நூலகச் சட்டத்தை நீடிக்க முயற்சி நடக்கிறது. இதற்கு முன்னோடியாக நாகர்கோவில் கவிமணி நூலகம் 17.8.1977 முதல் அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக தமிழ் நாட்டில் புதிதாக உருவான புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகம் ஏற்படுத்த முயற்சி நடக்கின்றது.

### 29 விரிவு

இனிமேலும் மக்கள் தேவைக்கு ஏற்ப — பணவருவாய்க் கேற்ப — மக்கள் ஆதரவு கொண்டு புதிய நூலகங்களைத் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3 தனி நூலகத்துறை

### 31 கவனிப்பு

1950 ஏப்ரல் முதல் நூலகச் சட்டம் செயல்படத் தொடங்கியது. கல்வித்துறையை நிர்வகித்து வந்த பொதுக் கல்வி இயக்குநர் நூலகத்துறையையும் கவனித்துக் கொண்டார்.

### 32 பொறுப்பு

உடனே மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் செயற்படத் தொடங்கின. மாவட்ட நிலையில் மாவட்ட மைய நூலகங்கள் தொடங்கப்பட்டன. நகரங்களில், பேரூர்களில், சிற்றூர்களில் கிளைகள் திறக்கப்பட்டன. இந்தக் காலக் கட்டத்தில் கல்வித் துறையைக் கவனித்து வந்த மாவட்டக் கல்வி அலுவலர் கல்வித் தொடர்பான நூலகப் பணிப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

### 33 தனி இயக்குநர்

மக்கள் தொகை பெருகப் பெருக, கல்வி வளர வளர; படிப்பார்வம் முன்னேற முன்னேற நூலகப் பணி வேலை அதிகமாகியது. கவனிப்பும் பொறுப்பும் போதுமானதாக யில்லை. நூலகத் துறைக்கென ஒரு தனித்துறை உருவாக்கப் பட்டது.

நூலகப் பயிற்சியும் நூலக அனுபவமும் கொண்ட நூலக இயக்குநர் திரு வே. தில்லைநாயகம் தலைமையில் 1972 ஆகஸ்ட் முதல் நூலகத்துறை தனித்துறையாகச் செயல் படத் தொடங்கியது.

### 34 மாவட்ட நூலக அலுவலர்

இதைத் தொடர்ந்து மாவட்ட நிலையில் அதிகமாகி வரும் நூலகப் பணியை முழுநேர வேலையாகக் கவனிக்க நூலகப் பயிற்சி பெற்ற — நூலகப் பட்டம் பெற்ற — நூலக அனுபவம் பெற்ற — மாவட்ட நூலக அலுவலர் கள் 1977 சனவரியில் நியமிக்கப்பட்டனர்.

### 35 பணியாளர்கள்

நூலகப் பணித்துறையில் பணிபுரியும் நூலகப் பணி யாளர்கள் அனைவரும் நூலக முறைமை விதிப்படி செயற் படத் தொடங்கினர். அரசுப் பணியாளர்கள் ஆகாமலே அரசுப் பணியாளர்கள் பெறும் வசதிகள் எல்லாவற்றையும் பெறத் தொடங்கினர்.

### 36 சலுகைகள்

அவ்வப்போது அரசுப் பணியாளர்கள் பெறும் சலுகை கள் எல்லாம் நூலகப் பணியாளர்களுக்கும் நீடிக்கப்பட்டு வருகிறது.

**சான்றுக்கு சில :-**

1. திருத்திய, உயர்த்திய சம்பளம் — G.O.Ms.No. 1050 Finance (P.C.) Dated 5.10.78
2. அகவிலைப்படி — G.O.Ms No. 1051 Finance (P.C.) Dated 5 10.78
3. வீட்டு வாடகைப்படி — G.O.Ms.No. 1052 Finance (P.C ) Dated 5,10.1978
4. நகர ஈட்டுப்படி — G.O.Ms.No. 1053 Finance (P.C.) Dated 5.10.1978
5. பயணப்படி — G.O.Ms.No. 1054 Finance (P.C.) Dated 5.10.1978
6. மலைவாழ்படி — G.O.Ms.No. 1055 Finance (P.C.) Dated 5.10.1978

7. மூக்குக் கண்ணாடி முன்பணம் — G.O.Ms.No. 878 Education Dated 4.6.1979

8. கேட்புரைமுன் பணம் — G.O.Ms.No. 59 Education Dated 9.1.1980

9. வெள்ள நிவாரண முன்பணம் — G.O.Ms.No. 238 Education Dated 12.2.1980

10. வெப்ப உடைமுன் பணம் — G.O.Ms.No. 236 Finance (Salaries) Dated 18.3.1980 (From Rs. 300 to Rs. 500)

11. கல்வி முன்பணம். — G.O.Ms.No. 690 Education Dated 14.4.80

12. மிதிவண்டி முன்பணம் — G.O.Ms.No. 742 Education Dated 23.4.1980

13, பண்டிகை முன்பணம் — G.O.Ms.No. 2357 Education Dated 1.11.80 (Rs 300/- to Rs. 500/-

14. பாடநூல் கொடை — G.O.Ms.No. 2471 Education Dated 18.11.80

15. காவலர்களுக்கு பண்டிகை முன்பணம் — G.O.Ms.No. 2643 Education Dated 11.12.80 (From Rs. 100/-To Rs.200)

## 37 குடும்ப நலத் திட்டம்

நூலகப் பணியிலிருக்கும் போது காலமாகும் ஊழியர்களின் குடும்பங்களுக்கு 10. 10. 1979 முதல் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பணமும் பிற வசதிகளும் (G.O.Ms.No.1851 Education, dated: 28.9.79) கொடுக்கப்பட்டுவருகின்றன.

## 38 ஓய்வூதியம்

அரசு ஊழியர்கள் போலவே, நூலகப் பணியாளர்களுக்கும் பணியிலிருந்து ஓய்வு பெறும் பொழுது ஓய்வூதியம் (பென்சன்) முதலிய வசதிகள் (G.O.Ms.No.862 Education dated 20.5.1980) அளிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 39 முன்னேற்றம்

இது மட்டுமல்ல, மேலும் நூலக ஆய்வாளர், இருப்புத் தணிக்கையாளர், மற்றும் கணக்காளர் முதலிய பதவிகள் (G.O Ms.No.1407), Education, dated 25.7.80) உண்டாக்கப்பட்டுள்ளன.

பயிற்சி பெறா நூலகர்கட்கு பயிற்சி அளிக்க சென்னையில் நடக்கும் பயிற்சி நிலையத்தின் கிளையொன்று திருச்சிராப்பள்ளியில் திறக்க ஆணை (G.O.Ms.No. 1409, Education, dated 25.7.80) இடப்பட்டுள்ளது.

நூலகங்களை நான்கு தரங்களாகப் பிரித்து அதற்கேற்ப பணியாளர்களை சீரமைக்க ஆணை (G.O.Ms.No. 1408 Education, dated 25.7.80) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 4 நூலக வரி

### 41 பணிக்குப் பணம்

நூலகப் பணியை வளர்க்கும் பொருட்டு - நூலகப் பணியை உணர்த்தும் பொருட்டு—நூலகச் சட்ட அடிப்படையிலே நூலக வரி (Library Cess ) விதிக்கப்பட்டுள்ளது. இந்த நூலகவரிமூலம் வசூலாகும் பணம் தான் நூலகப் பணிக்கு ஆதாரமாகும்.

### 42 வசூல்

இந்த நூலக வரியை ஆங்காங்குள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் — மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி, ஒன்றியங்கள் பேரூராட்சிகள், சொத்து அலலது வீட்டுவரி (Property Tax/House Tax)யில் மேல் வரி (Surcharge)யாக வசூலித்து நூலக நிர்வாகங்களுக்கு செலுத்தி வருகின்றன.

### 43 இணைமானியம்

மக்கள் தரும் வரியை ஊக்க—உணர்த்த—வசூலிக்கப்படும் நூலகவரிக்குச் சமமாக சட்ட பூர்வமாக இணை மானியம் (Matching Grant) தந்து வருகிறது அரசு.

### 44 நிர்வகிப்பு மானியம்

இது மட்டுமல்ல; நூலகப் பணியை கிராமியப் பகுதியிலுள்ள மக்களுக்கு நீட்டிக்கும் வகையில் நிறுவப்படும்

நூலகங்களுக்கான நிர்வகிப்பு மானியம்(Maintenance Grants) முழுவதையும் தருகிறது அரசு.

**45 போதவில்லை**

வளர்ந்துவரும் பணியாளர்கள் ஊதிய உயர்வால், நூலகக் கட்டடங்கள் வாடகை உயர்வால், நூல்கள், பருவ இதழ்கள், செய்தித்தாள்கள் விலை உயர்வால், கிடைக்கும் வருமானம் நூலகங்களை நிர்வகிப்பதற்கு போதவில்லை.

**46 வரி உயர்வு**

எனவே ரூபாய்க்கு 3பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த நூலகவரி 1972 ஏப்ரல் முதல் ரூபாய்க்கு 5பைசாவாக G. O. Ms. No 252, Education, Dated 22.2. 1972) உயர்த்தப்பட்டுள்ளது.

**47 தொடர்பு**

இப்படி அதிகமாக்கப்பட்டுள்ளவரி, அதிகமாகிவரும் நூலகப் பணியை நிர்வகிக்கத் தேவையான நிதி ஆதாரம் (அரசு, கிராம வளர்ச்சி இயக்குநர், நகராட்சி இயக்குநர், தலதாபன ஆட்சியாளர்கள், தலக்கணக்கு ஆய்வாளர்கள் முதலியவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு) வளரும் வகை செய்யப்பட்டுள்ளது.

**48 வசூல்விவரம் - இணைப்பு**

**49 அதிகமாகும்**

இந்த வருமானம், காலப் போக்கில் சொத்து வரி வீட்டுவரி அதிகமாகும் போது, மேல் வரியான நூலகவரி வசூலும் அதிகமாகும் என நம்புவோம்! இந்த முயற்சி எல்லாம் ஏன்?

## 5 நூல்கள் சேர்ப்பு

**51 நூல்**

நுவலப்படுவது நூல் என்று பெயர் பெற்றது. இந்த நூல் ஐந்து அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது கல்வி அறிவு தர வேண்டும்; நடைமுறை நிலையை தெரிவிக்க வேண்டும்; கடமை உரிமையை உரைக்க வேண்டும்; பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும்; கலாச்சாரத்தைக் காக்க வேண்டும்.

48. **வசூல் விவரம்**

**இம்முறையில் கடந்த ஆண்டுகளில் வசூலான நூலகவரி வளர்ச்சிக் கணக்காவது :**

| வ. எண் | ஆண்டு | மொத்தம் | திருநெல்வேலி மாவட்டம் | சென்னை மாவட்டம் | பிறமாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | 1972–73 | 45,12,452-79 | 2,76,116–89 | 18,41,557–91 | 23,94,777–99 |
| 2. | 1973-74 | 58,38,176-90 | 3,91,574–43 | 12,19,893-00 | 42,26,709–47 |
| 3 | 1974–75 | 53,44,988–36 | 4,53,586-41 | 5 00,000-00 | 43,91,401-95 |
| 4. | 1975–76 | 59,55,242–80 | 3,87,819-69 | 39,005–05 | 55,28,423-06 |
| 5 | 1976-77 | 1,02,80,863–54 | 4,82,757–04 | 37,00,000-00 | 60,98,106–50 |
| 6. | 1977-78 | 1,27,29,888–68 | 4,66,525-93 | 57,91,963–10 | 64,71,399-65 |
| 7. | 1978-79 | 96,86,559–75 | 6,84,578–04 | 18,99,601-69 | 71,02,380-02 |
| 8. | 1979-80 | 1 45,95,074-47 | 6.26 991–24 | 69,00,000–15 | 70,68,083–08 |

### 52 நூல் பஞ்சம்

யுனெசுகோ அறிக்கைப்படி இத்தகு நூல் ஐரோப்பா விலும் வட அமெரிக்காவிலும் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2,000 பக்கங்கள் நூல் உணவு கிடைக் கிறதாம்.

ஆனால் இந்தியாவில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 32 பக்கங்கள் கூடத் தேறுவது இல்லை யாம்!

### 53 நமது இருப்பு

அப்படியானால் நமது நிலை – தமிழ்நாட்டின் நிலை என்ன? 1954 முதல் 1974 வரை – அதாவது கடந்த இருப தாண்டுகளாக நமது 1464 நூலகங்களிலும் உள்ள நூல்கள் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் 50 இலட்சங்கள் தான்!

### 54 தலைக்கு 20 பக்கங்கள்

இதைக் கணக்கிட்டால் தலைக்கு அரைக்கால் நூல் கூட இல்லை. அதாவது அண்மையில் எடுத்த கணக்குப் படி சராசரி தமிழ் நூல் 160 பக்கங்கள் என்ற கணக்குப் படி 20 பக்கங்கள் தான் உள்ளன.

### 55 அரசு ஆணை

இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு முன் வந்தது. இத் திட்டப்படி இனிமேல் நூலக வரிக்கு இணையாகக் கொடுக்கும் இணை மானியத்தில் 25 விழுக்காடு – அதாவது கால் பகுதி – நல்ல நூல்களாகக்கொடுப்பது என முடிவு செய்து ஆணை (G. O. Ms. No. 2038, Education, Dated 28.12.72) பிறப்பித்தது.

### 56 நடப்பு

இந்தத் திட்டம் 1974–75 முதல் அமுலுக்கு வந்தது. இதன் விளைவாக ஏராளமான நூல்கள் பொது நூலகத் துறையால் தமிழ் நாடு முழுவதும் உள்ள நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

* அதன் விவரமாவது :

| வரிசை எண் | ஆண்டு | நூல்கள் | படிகள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 1974—75 | 670 | 1,18,401 | 6,76,358.05 |
| 2. | 1975—76 | 152 | 35,762 | 1.86,883.50 |
| 3. | 1976—77 | 455 | 2,01,512 | 8.97,170.60 |
| 4. | 1977—78 | 2074 | 5,01,406 | 29,13,129.30 |
| 5. | 1978—79 | 1484 | 3,66,229 | 24,99,074.55 |
| 6. | 1979—80 | 3087 | 4,94,432 | 30,52,440.40 |
| | மொத்தம் | 7922 | 17,17,742 | 1,02,25,056.40 |
| 7. | சென்னை (1977-80) | ... | 2,97,227 | 16,47,677.16 |
| | ஆக மொத்தம் | 7922 | 20,14,969 | 1,18,72,733.56 |

**57 நூலடுக்கு**

நூல்கள் வாங்கியதோடு அரசு நின்று விடவில்லை. பெருகி வரும் நூல்களை அழகாக வைக்க, எடுக்க, அடுக்க ரூ 7.38 இலட்சங்கள் மதிப்புள்ள 1500 நூலடுக்குகளை டான்சி நிறுவனம் மூலம் வாங்கி விநியோகித்து உள்ளது 1977-78ல். (G.O.Ms. No. 1364, Education, dated 16-6-1977) இதைத் தொடர்ந்து 1980-81ல் ரூ. 47 இலட்சங்கள் மதிப்புள்ள 3000 நூல் அடுக்குகளை வாங்கி விநியோகிக்க அரசு ஆணை (G.O. Ms. No. 2653, Education, dated, 11.12.80) பிறப்பித்துள்ளது.

**58 பயன்**

இப்படி அரசே நேரடியாக நூல்களை வாங்குவதன் காரணமாக தமிழ் நூல் வெளியீட்டு முயற்சி (கன்னிமாரா பொது நூலகக் கணக்கெடுப்புப்படி முதல் பதிப்பு மட்டும்) வெகுவாக முன்னேறியிருக்கிறது.

**இதோ சில புள்ளிவிவரங்கள் :-**

| வரிசை எண் | ஆண்டு | வெளியான நூல்கள் |
|---|---|---|
| 1 | 1971 | 480 |
| 2 | 1972 | 619 |
| 3 | 1973 | 651 |
| 4 | 1974 | 654 |
| 5 | 1975 | 784 |
| 6 | 1976 | 762 |
| 7 | 1977 | 1095 |
| 8 | 1978 | 1173 |

இதனால் சிறந்த நூல்கள் குறைந்த விலையில் நிறைந்த அளவில் வெளிவரத் தொடங்கியுள்ளன. மேலும், அட்டைக் கட்டு, நூல் தொகை விவரங்கள், விலை நிர்ணயம் முதலிய துறைகளிலே முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

**59 சோதனை/சாதனை**

இப்படி ஆறு ஆண்டுகளிலே 118.7 இலட்சங்கள் மதிப்புள்ள தொகைக்கு அரசினரால் — பொது நூலகத்துறையால் — வாங்கிய முயற்சி — சோதனை — இருபதாம் நூற்றாண்டிலேயே இந்தியாவிலேயே ஒரு சாதனையாகலாம் என்று சொன்னால் உயர்வு நவிற்சியாகாது.

# 6 நூல்கள் அறிமுகம்

## 61 என்ன?

ஒருவருக்கு ஒருவர் தெரிந்து கொள்ளுதல் அறிமுக மாகும். இதை இருவரையும் தெரிந்த மூன்றாவது ஒருவர் தொடர்பு செய்து வைக்கும்போது அறிமுகம் முழுமை அடையும். இதுதான் முறையுங்கூட.

## 62 ஏன்?

இன்று நூல்கள் நூற்றுக்கணக்கில் — ஆயிரக்கணக்கில்— வெளிவருகின்றன. இவைகளை நாடி நிற்பவர்களும் நூற்றுக் கணக்கில் — ஆயிரக்கணக்கில் உள்ளனர். ஒவ்வொரு நூலை யும் ஒவ்வொரு வாசகரும் அறியவேண்டுமானால் நூல்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

## 63 எப்படி?

இன்று உலகம் முழுமையும் வெளிவரும் பல்வேறு மொழி களிலுள்ள நூல்களை எல்லாம் அந்தந்த மொழியினர் — நாட்டினர் — பதிப்பாளர் மூலம்—நூலகர் மூலம்—தொகுத்து நூல்பட்டியாக அறிமுகம் செய்து வருகின்றனர்.

## 64 நம்புகிறோம்

இப்படி வரும் நூல் பட்டிகள் வெளிவர நாளாகிறது. வந்தவை எல்லோருக்கும் கிடைப்பதில்லை. கிடைத்த பட்டியை எல்லா வாசகர்களும் பார்ப்பது இல்லை; பார்க்க முடிவதில்லை; எனவே நேரடி அறிமுகம் இல்லை.

## 65 நடப்பது என்ன?

நூல்களை நேரடியாக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வில்லை. முடியுமா என்றால் முடியும் என்று தான் சொல்ல வேண்டும். முயன்றோமா என்றால் முயலவில்லை. அவ் வளவு தான். முயன்றால் என்ன?

## 66 முதல் முயற்சி

இம்முறையில் 23.6.1975 அன்று 1974ல் தமிழில் வெளி யாகி கன்னிமாராவில் கிடைத்த 370 நூல்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. இத்தோடு நூலாசிரியர்களும் அறி முகம் செய்து வைக்கப்பட்டனர். நூல்களைப் பற்றிய

தகவல்கள் – ஆக்கியோர், தலைப்பு, வெளியான நாள், பக்கங்கள், விலை, துறை, பதிப்பாளர் – முதலிய தகவல்களை தொகுத்து அச்சு நூலாக வெளியிடப்பட்டது.

67 இரண்டாவது விழா

1975ல் வெளியாகி கன்னிமாரா நூலகத்தில் கிடைத்த நூல்கள் 1975 ஜனவரி 16ம் நாள்–திருவள்ளுவர் திருநாள் அன்று – கன்னிமாரா பொது நூலகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. நூலாசிரியர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

1975ல் வந்த தமிழ் நூல்களின் மொத்த பக்கங்கள் 70,335. சராசரி ஒரு நூலின் பக்கங்கள் 160 தான். நூல்களின் மொத்த விலை ரூ. 2678 சராசரி ஒரு நூலின் விலை ரூ5.00 தான். இயல்பு இயல், உயிரியல், தாவர இயல், நுண்கலைகள், சட்டம் முதலிய துறைகளில் ஒரு நூல் கூட வரப்பெறவில்லை.

68 திங்கள் தோறும்

1977 ஏப்ரல் தொடங்கி மாவட்ட மைய நூலகங்களிலும், கிளை நூலகங்களிலும் வசதிக் கேற்ப வாசகர்கள் ஆர்வத்திற் கேற்ப–மாதந்தோறும் வெளிவரும் நூல்களை காட்சிக்கு வைக்கிறோம். இரண்டு மூன்று நூல்களை அறிஞர்களைக் கொண்டு அறிமுகம் செய்து வைக்கிறோம். முடிந்த போது பேச்சின் சுருக்கங்களைப் பருவ இதழ்களில் வெளியிட்டு வருகிறோம். இதற்குப் பிறகு சிறப்பாக கிராமப் பகுதிகளில் நல்ல வரவேற்புள்ளது. எனவே தொடர்கிறோம்.

69 பயன் என்ன?

இப்படிச் செய்வதால் தமிழில் என்னென்ன நூல்கள் வெளி வருகின்றன என்ற செய்திகளை நூலகர்கள், வாசகர்கள், பதிப்பாளர்கள் ஆகிய மூவரும் அறிய முடிகிறது. இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் இப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## 7 கட்டடங்கள்

71 இருக்க இடம்

ஒவ்வொரு நிலையமும் — கல்வி நிலையமும் — நூலகமும் இருக்க தனக்கென ஒரு தனி இடம் கொண்டியங்க

வேண்டும். அப்போதுதான் அதன் பணியைச் சிறப்பாகச் செய்ய இயலும். இது பற்றிய நமது நிலை என்ன?

### 72 மாவட்ட நூலகங்கள்

தற்போது நமக்குள்ள மாவட்ட மைய நூலகங்கள் மொத்தம் 14. இதில் சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய எட்டு மாவட்ட மையநூலகக் கட்டடங்கள் சொந்த மானவை. பிறஆறு மாவட்ட மையநூலகங்கள் - இராமநாத புரம், கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, நீலகிரி, பெரியார்-வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

### 73 கிளைநூலகங்கள்

தற்போது 1449 கிளை நூலகங்கள் இயங்கி வரு கின்றன. இதில் 57 கிளைக் கட்டடங்கள் தான் நமக்குச் சொந்தமானவை. பிற வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

### 74 வாடகை

இவைகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5. 3 இலட்சங்கள் செலவாகிறது. ஆண்டு தோறும் வாடகை அதிகமாகிக் கொண்டே வருகிறது. இருந்தும் நல்ல கட்டடங்கள் கிடைப் பது என்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது.

### 75 திட்டம்

எனவே இந்நிலையை மாற்றிச் சொந்தக் கட்டடங் களைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்முறையில் நகராட்சிகள் உதவியுடன் இலவசமாக இடம் கொடுத்தால் அரசு மானியம் பெற்று கிளை கட்டடங்கள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 76 மாதிரிக் கட்டடம்

இதற்காக மாதிரிக் கட்டட வரை படம் ஒன்று அர சினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (G. O. Ms. NO. 1513, Education, Dated, 17.7.80 )

### 77 சென்னை மாவட்டக் கட்டடம்

வட்டாரத்திற்கு ஒரு நூலகம் வீதம் 15 வட்டார நூலகங்களும் (Circle Library) வட்டத்திற்கு ஒரு கிளை

நூலகம் (Divisional Library) வீதம் 135 கிளைகள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கு வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்றுவாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சி வாரியம் முதலியவைகளோடு தொடர்பு கொண்டு இடம் பெற்று கட்டடம் கட்ட முயற்சி நடந்து வருகிறது.

**78 பிற மாவட்டக் கட்டடங்கள்**

**மதுரை**

ரூபாய் 5.5 இலட்ச மதிப்பில் மதுரையில் மைய நூலகத்திற்கு கட்டடம் 1970ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. சுமார் ரூ25,000 மதிப்பில் போடி நாயக்கனூர், வீரபாண்டி, சுருளிப்பட்டி, பண்ணைபுரம் ஆகிய ஊர்களில் நூலகத்திற்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. வத்தலக்குண்டு, கணக்கன் பட்டி ஆகிய இடங்களில் கட்டடங்கள் நன்கொடையாகப் பெறப்பட்டு அக்கட்டடங்கள் ரூ 5,000/- செலவில் புதுப் பிக்கப் பட்டுள்ளன.

வட்டத் தலைநகர்களிலும், நகரவை உள்ள ஊர்களிலும் புதிதாக ஒன்பது நூலகக் கட்டடங்கள், ஒவ்வொன்றும் ரூபாய் 2.00,000 /- செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இவைகள் தவிர, பேரூராட்சி, ஊராட்சிகளில் காலி மனைகள் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளனவற்றில் புதிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது.

**திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூ30இலட்சம் (அரசாணை எண் 639, கல்வி, நாள் 5.4.1980) மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகத்திற்கு பல அடுக்கு மாடிக்கட்டடம் கட்டமாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் 3.10.1980ல் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**கோயம்புத்தூர்**

ரூ30/-இலட்சம் செலவில் கோயம்புத்தூர் நகரில்–வடக்கு கோயம்புத்தூரில் ஒரு கட்டடமும், பெரியகடை வீதியில் ஒரு கட்டடமும்—கட்ட ஆணை (G. O. Ms. No.

2248, Education, dated, 16. 10. 1980) இடப்பட்டுள்ளது. மேலும் நகரின் பிற பகுதிகளிலும் இடம் பெற்று கட்டடம் கட்ட முயற்சி நடந்து வருகிறது.

**சேலம்**

சேலம் நகரில் ரூ 9. 60 இலட்ச மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகக் கட்டடம் முடியும் தருவாயில் உள்ளது.

**பெரியார்**

இம்மாவட்டத்தில் ஈரோடு நகராட்சிக்குச் சொந்தமான சிதம்பரனார் பூங்காவின் ஒரு பகுதியில் மாவட்ட மைய நூலகக் கட்டடம் கட்ட முயற்சி நடந்து வருகிறது.

**வடஆற்காடு**

இம்மாவட்டத்தில் திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய நகராட்சி பகுதிகளில் இடம் பெற்று கட்டடம் கட்ட முயற்சி நடந்து வருகிறது.

இது போன்றே பிற மாவட்டங்களிலும் கட்டட முயற்சிகள் நடந்து வருகின்றன.

*79* **கொடை**

மேலும் மக்கள் ஆதரவு பெற கொடை பெறும் முயற்சி திட்டமிடப்பட்டுள்ளது. இம்முறையில் ரூ50/- ஆயிரம் மதிப்புள்ள கிளைக் கட்டடம் கட்டிக் கொடுக்க வருபவர்கள் குறிப்பிடும் மறைந்தவர் ஒருவர் பெயரில் அக்கட்டடங்கள் அழைக்கப் பெறும்!

இம்முறையில் சேலம், திருச்சி, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் ஆதரவு கொடுக்க முன் வந்துள்ளனர் நூலக ஆர்வலர்கள்!

# 8 பணி மதிப்பீடு

*81* **நல்ல பணி**

நல்ல பணியைப் போல நல்ல விளம்பரம் வேறு கிடையாது. வாசகர்கள் மன நிறைவு கொள்ளும் வகையில் நூலகப் பணி நடக்குமானால் அதுவே ஒரு நல்ல விளம்பரமாகும். இம்முறையில் நாம் என்ன செய்திருக்கிறோம்.

## 1979–80ல் நடந்த பணியின் சுருக்கமான புள்ளி விவரங்கள்.

82 நடந்த பணி.

| வரிசை எண் | பணி அலகு | பணி முனை கள் | பணி யாளர் கள் | நூல் இருப்பு | வாசகர் கள் | படித்த நூல்கள் | உறுப் பினர்கள் | கடன் கொடுத்த நூல்கள் | மொத்தம் பயன்பட்ட நூல்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கன்னிமாரா | 1 | 103 | 3,20,385 | 1,91,522 | 5,74,566 | 13,714 | 1,32,836 | 7,07,402 |
| 2 | செங்கல்பட்டு | 117 | 279 | 7,69,268 | 26,58,249 | 5,56,391 | 64,845 | 2,86,457 | 8,42,848 |
| 3 | கோயமுத்தூர் | 197 | 628 | 12,71,875 | 33,86,011 | 7,37,588 | 1,41,830 | 5,61,996 | 12,99,584 |
| 4 | தருமபுரி | 36 | 99 | 1,75,600 | 7,36,522 | 1,33,464 | 37,181 | 1,18,317 | 2,51,781 |
| 5 | சென்னை | 120 | 296 | 11,97,577 | 28,06,452 | 6,61,268 | 57,145 | 3,89,978 | 10,51,246 |
| 6 | மதுரை | 159 | 311 | 9,37,470 | 30,49,976 | 7,76,854 | 90,587 | 11,20,641 | 18,97,495 |
| 7 | நீலகிரி | 36 | 85 | 1,56,919 | 5,44,143 | 63,873 | 28,080 | 2,20,213 | 2,84,086 |
| 8 | வடஆற்காடு | 88 | 168 | 3,72,175 | 24,08,800 | 6,19,713 | 51,241 | 9,90,815 | 16,10,528 |
| 9 | இராமநாதபுரம் | 177 | 269 | 4,78,514 | 28,17,213 | 4,37,146 | 73,679 | 4,26,224 | 8,63,370 |
| 10 | சேலம் | 80 | 221 | 3,46,310 | 20,48,387 | 3,04,142 | 78,138 | 6,77,837 | 9,81,979 |
| 11 | தென்ஆற்காடு | 113 | 222 | 3,05,989 | 16,47,766 | 1,15,977 | 45,773 | 3,83,167 | 4,99,144 |
| 12 | தஞ்சாவூர் | 107 | 276 | 5,52,879 | 24,11,617 | 6,84,458 | 80,534 | 8,15,448 | 14,99,906 |
| 13 | திருச்சி | 108 | 291 | 4,69,637 | 24,76,730 | 5,13,921 | 43,371 | 4,03,996 | 9,17,917 |
| 14 | திருநெல்வேலி | 125 | 272 | 5,55,303 | 22,79,526 | 2,96,311 | 63,459 | 5,83,228 | 8,79,539 |
| | மொத்தம் | 1464 | 3520 | 79,09,901 | 294,62,914 | 64,75,672 | 8,70,577 | 71,11,153 | 135,86,825 |

இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்ன?

### 83 நூல் இருப்பு

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக நாம் சேர்த்துள்ள நூல்களின் எண்ணிக்கை 79.1 இலட்சங்கள்! இதை சராசரியாக கணக்கிட்டால் ஒரு ஆளுக்கு 0.18நூல் தான் வருகிறது. அதாவது 20 பக்கங்கள்! இதுபோதுமா? தலைக்கு ஒரு நூலாவது அடுத்த பத்தாண்டுகளிலாவது பெற முயல வேண்டும்.

### 84 வரசகர்

1464 பணி முனைகளில் வந்த வாசகர்களின் எண்ணிக்கை 295 இலட்சங்கள்!

411 இலட்சம் மக்கள் கொண்ட தமிழ் நாட்டில் நூலகத்திற்கு வந்த மக்கள் 295 இலட்சங்கள். அதாவது ஆண்டு முழுவதும் வந்த கணக்கு ஒன்று கூட வரவில்லை. எனவே வாசகர்களை வரவேற்க மேலும் முயல வேண்டும்.

### 85 பார்த்தவை

வாசகர்கள் பார்த்த நூல்கள் — நூலகங்களில் பார்த்த நூல்கள் 65 இலட்சம் அதாவது கால் நூல் கூட படிக்கவில்லை. இது ஏன்? பெரும்பாலோர் நாளிதழ்களையும், பருவ இதழ்களையும் படித்துவிட்டு போய் விடுகின்றனர். நூல்களையும் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

### 86 உறுப்பினர்கள்

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 8.7 இலட்சங்கள் தான். 162 இலட்சம் படித்தவர்கள் உள்ள தமிழ்நாட்டில் உறுப்பினர்கள் 8.7 இலட்சங்கள் தான். அதாவது உறுப்பினர் விழுக்காடு 5 தான். இதை உயர்த்த வேண்டும்.

இந்த உறுப்பினர்கள் படித்த நூல்களின் எண்ணிக்கை 71 இலட்சங்கள். அதாவது ஆண்டொன்றுக்கு ஒருவர் 9நூல் தான் படித்துள்ளார். இது போதாது. நூல்பயனை அதிகமாக்க வேண்டும்.

## 87 காசுக் கணக்கு

1979-80ல் தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக தலைக்கு ரூ215 செலவழிக்கப்பட்டுள்ளது. கல்வி வளர்ச்சிக்காக தலைக்கு ரூ54- செலவழிக்கப்பட்டுள்ளது. ஆனால் நூலகப்பணிக்கோ 0.80 காசுதான் செலவழிக்கப்பட்டுள்ளது. கல்விச் செலவில் பத்தில் ஒரு பகுதியாவது நூலகப்பணிக்குச் செலவிடத் திட்டமிட வேண்டும்.

## 88 கன்னிமாரா காண்க

கன்னிமாரா பொது நூலகம் 1980 ஏப்ரல் முதல் தேதி முதல் தினசரி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை—பன்னிரண்டு மணி நேரம் — இடைவெளியில்லாமல் பொது மக்கள் பயனுக்குத் திறந்து இருக்கிறது.

வருடத்தில் குடியரசு நாள், சுதந்திர நாள் மற்றும் மகாத்மா காந்தி பிறந்த நாள் ஆகிய மூன்று நாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் நூலகம் வேலை செய்யும்.

இந்நூலகத்தில் தற்போது 3.2 இலட்சம் நூல்கள் இருக்கின்றன. இதை மேலும் உயர்த்த ஆண்டுதோறும் வெளி நாட்டில் வெளியாகும் புதிய ஆங்கில நூல்களும் வாங்கப் படுகின்றன.

மேலும் சட்டபூர்வமாக இந்தியாவில் அச்சாகும் நூல்கள், பருவ இதழ்கள், செய்தித்தாள்கள் எல்லாம் இங்கு கிடைக்க தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முறையிலே ஆண்டொன்றுக்கு இந்திய மொழிகளில் 12 ஆயிரம் நூல்களும், 5000 பருவ இதழ்களும், 250 தினசரி செய்தித் தாள்களும் வருகின்றன.

இந்த நூலகத்தை எல்லா வயதினரும் எப்போதும் இலவசமாகப் பயன்படுத்தலாம். கடந்த 1979-80ம் ஆண்டில் மட்டும் 1.92 இலட்சம் வாசகர்கள் வந்த செய்தி குறிப்பிடத்தக்கதாகும்.

வீட்டிற்கு நூல்களை எடுத்துச் சென்று படிக்க விரும்புபவர்கள் ரூ20/- (விதிமுறைப்படி) காப்புப் பணம் செலுத்தி

படித்துவிட்டு திரும்பத்தரலாம். இம்முறையிலேயே தற்போது இந்த நூலகத்தில் 13,700 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

இப்படி எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இந்த நூலகத்தை நன்கு பயன்படுத்தி பயன் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

**89 மாவட்டப் பணி**

இம்மாவட்டபணி – இணைப்பில் காண்க.

# 9 அர்ப்பணிப்பு

**91 புரிவது என்ன?**

முன் கண்ட முயற்சிகளிலிருந்து—விவரங்களிலிருந்து —செய்திகளிலிருந்து— புரிவது என்ன?

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதற்கான இடம் நோக்கி நடக்கின்றது தமிழ்நாடு! இம்முயற்சி வெற்றி பெற நாம் செய்ய வேண்டியது என்ன?

**92 சிலரே வருகின்றனர்**

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக நாம் நூலகப் பணியை நடத்தி வந்தும் வாசகர்கள் கணக்கைப் பார்க்கும் போது எல்லோரும் நூலகம் வந்து படிக்கவில்லை. சிலரே வருகின்றனர் என்று தெரிகிறது. இந்த நிலை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். இதற்கு நாம் என்ன செய்யவேண்டும்.

**93 அளவீடு நடத்துவோம்**

மக்கள் தானாக நூலகம் வருவர் என்று இருந்து விடாமல் எல்லோரும் நூலகம் வருவதற்கு திட்டமிட வேண்டும். நவம்பரில் தேசிய நூலகம் வாரம் கொண்டாடுவதோடு நின்று விடாமல் — நூல்கள் அறிமுகப்படுத்துவதோடு நின்று விடாமல் — பிற விழாக்களோடு நின்று விடாமல் — மக்கள் தேவை என்னவென்று அறிய வீடு வீடாக சென்று அளவீடு நடத்த வேண்டும்.

94 படிக்கச் செய்வோம்

இதை அடிப்படை வேலையாகக் கொண்டு நூலகப் பணியாளர்கள் ஒவ்வொருவரும்—அவசியமானால் வாசகர், நூலார்வலர், சமூகத் தொண்டர்கள் துணை கொண்டு படித்தவர் ஒவ்வொருவரும் நூலகம் வர ஒரு இயக்கமே நடத்த வேண்டும். படித்த ஒவ்வொருவரும் நூலகம் வந்து படிக்கச் செய்ய வேண்டும்.

95 படித்துக் காட்டுவோம்

இது மட்டும் போதாது. நம்மில் இன்னும் நூற்றுக்கு அறுபது பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் படிக்க ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே நூலகத்தில் தினந்தோறும் கொஞ்ச நேரம் படித்துக் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

96 உறுப்பினராக்குவோம்

நூலகத்திற்கு வரும் ஒவ்வொருவரோடும் பேசி வேண்டியதைத் தந்து படிப்பை ஊக்கவேண்டும். அவர்கள் தொடர்ந்து வீட்டிலும் படிப்பதற்கு ஏதுவாக உறுப்பினராக உதவி செய்ய வேண்டும்.

97 ஆளுக்கு ஒரு நூல்

இம்முறையிலே முயன்றால் தான் "நிறைந்த மக்களுக்கு குறைந்த செலவில் சிறந்த படிப்பு" (THE BEST READ-ING FOR THE GREATEST NUMBER AT THE LEAST COST )திட்டமிட்டபடி ஆளுக்கு ஒரு நூல் கிடைக்க வழி பிறக்கும்.

98 அர்ப்பணிப்போம்

எனவே அறிவின் முன்னோடிகளாகிய நாம்- நூலகர்கள், நூலக ஆர்வலர்கள். கல்வியாளர்கள். சமூக உணர்வாளர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து நூல் உணர்வு வளர, நூலக உணர்வு பரவ, அயராது உழைக்க வேண்டும்; ஒன்றாக உழைக்க வேண்டும்; நன்றாக உழைக்க வேண்டும். இதற்காக நாம் நம்மை நூலகப் பணிக்காக அர்ப்பணிப்போம்.

99 **காணிக்கையாக்குகிறோம்**

இதையே சுவையாகச் சொல்வோம்—எல்லோரும் எளிதாக நினைவில் வைத்துக் கொள்ள கவிதையாகச் சொல்வோம். இதோ காணிக்கையாக்குகிறோம்.

தண்எனும் நீரும் தவழ்ந்து வரும் நற்காற்றும்
விண்இழியும் ஒளியும் வித்தியாச மேதுமின்றி
மண்ணுலக மக்களுக்கு மகிழ்ச்சி யளிப்பதுபோல
கண்ணொத்த அறிவினை நாம் காணிக்கை
யாக்கிடுவோம்!

இப்பணியைச் செய்வதற்கு இவ்வுலக சாதனத்தில்
முப்போதும் பயன்தரவே முறுவலோடு கணந்தோறும்
ஒப்பேதும் உரைக்கவொணா உயிரியநன் நிலையினிலே
எப்போதும் நிற்பெதது? எழுச்சிகொள் நூலகம்தான்!

ஒன்றாக நாம் நூலகத்தில் ஒரு கை விரல் போல
நன்றாக உழைத்திடுவோம் நல்லவராய்த்
திகழ்ந்திடுவோம்
முன்னேற்றம் கண்டிடுவோம் முந்து நிலை
பெற்றிடுவோம்
மின்னாகப் பாய்ந்திடுவோம்; மிகப் பெருமை
நாட்டிடுவோம்!



## திருநெல்வேலி மாவட்டத் திருப்பணி

### 1 அமைவு

திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழு 18-9-1950ல் ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட மைய நூலகம் 1952ல் பாளையங்கோட்டையில் தொடங்கப்பட்டது. இம்மாவட்டத்தில் தற்போது மைய நூலகமும், 124 கிளை நூலகங்களும், 36 வழங்கு முனைகளும் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட மைய நூலகம் மற்றும் 124 கிளை நூலகங்களும் காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரையிலும் மாலையில் 3.30 மணி முதல் 7.30 மணி வரையிலும் செயல்பட்டு வருகின்றன.

பெண்களுக்கென தனி நூலகம் பெருமாள்புரத்திலும், சிறுவர்களுக்கென தனி நூலகம் பாளையங்கோட்டையிலும் இயங்கி வருகின்றன. பெண்கள் & சிறுவர்களுக்கென தனி நூலகங்கள் பாளையங்கோட்டையிலும், தூத்துக்குடியிலும் இயங்கி வருகின்றன வீடுகளுக்கு நூல்கள் வழங்கும் இயங்கு நூலகமும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 2 கட்டடம்

இம்மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகம் மற்றும் பரமன்குறிச்சி, வீரசிகாமணி கிளை நூலகங்கள் சொந்தக் கட்டடங்கள். 38 கிளை நூலகங்கள் இலவசக் கட்டடங்கள், 84 கிளை நூலகங்கள் வாடகைக் கட்டடங்கள்.

மைய நூலகக் கட்டடம் போதுமான இடவசதி இல்லாததால் பாளையங்கோட்டை நகராட்சியால் நன்கொடையாக வழங்கப்பட்ட சரோஜினி பூங்காவில் மைய நூலகத்திற்கும் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்-கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி எல்கைகளுக்குள் இயங்கும் தூத்துக்குடி, தென்காசி, கடையநல்லூர், சங்கரன் கோவில், கோவில்பட்டி ஆகிய கிளை நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

## 3 நூல் இருப்பு

இம்மாவட்டத்தில் 125 பணி முனைகளிலும் 5.6 இலட்சம் நூல்கள் இருக்கின்றன. இதை மேலும் உயர்த்த அரசு கொடுக்கும் இணைமானியத்தில் நான்கில் ஒரு பகுதிக்கு நல்ல நூல்களாக வாங்கப்பட்டு வருகிறது. இம்முறையிலே ஆண்டு வாரியாக வாங்கப்பட்ட விவரமாவது:

| வ. | | தலைப்பு | | | படிகள் | | | மொத்த |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண். | ஆண்டு | தமிழ் | ஆங் | பிற | தமிழ் | ஆங் | பிற | மதிப்பு |
| 1 | 1974–75 | 747 | 89 | – | 12,501 | 643 | – | 72,310 |
| 2 | 1975–76 | 76 | 22 | – | 2,289 | 89 | – | 11,166 |
| 3 | 1976–77 | 757 | 326 | – | 31,181 | 2,276 | – | 1,35,617 |
| 4 | 1977–78 | 631 | 967 | – | 22,327 | 5,429 | – | 97,116 |
| 5 | 1978–79 | 852 | 723 | – | 24,310 | 2,385 | – | 1,91,072 |
| 6 | 1979–80 | 901 | 1,503 | – | 30,636 | 5,464 | – | 2,63,460 |

மாவட்ட மைய நூலகத்திற்கு 10 நாளிதழ்களும் 97 பருவ இதழ்களும் வருகின்றன. கிளை நூலகங்களுக்கு 3 முதல் 10 வரை நாளிதழ்களும் 15 பருவ இதழ்களும் வருகின்றன.

## 4 வாசகர் படித்தவை

இம்மாவட்டப் பணி முனைகளில் 1979–80ம் ஆண்டு வந்த வாசகர்களின் எண்ணிக்கை 22, 79, 526. இதை ஆராய்ந்தால் 32,00,515 மக்கள் கொண்ட இம்மாவட்டத்தில் நூலகத்திற்கு ஒரு முறைகூட ஒவ்வொருவரும் வரவில்லை, அதாவது ஆண்டு முழுவதும் வந்த வாசகர்கள் மக்கள் தொகையைவிட எண்ணிக்கை குறைவு. இந்த நிலை மாற மக்கள் நூலகம் வரவேண்டும்.

நூலகத்திற்கு வந்த 22.8 இலட்சம் வாசகர்களும் நூலகங்களில் படித்த நூல்கள் 2,96 311 தான். அதாவது பத்தில் ஒருவர் வீதம் தான் நூல்களைப் படித்திருக்கின்றனர். இது ஏன். பெரும்பாலோர் நாளிதழ்களையும் பருவ இதழ்களையும் படித்துவிட்டுப் போய்விடுகின்றனர். இந்த நிலை மாற, நூல்கள் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

5 உறுப்பினர்கள் படித்தவை

கடந்த 28 ஆண்டுகளாக மார்ச் 1980 முடிய சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 63,459. இம்மாவட்டத்தில் படித்தவர்கள் எண்ணிக்கை 14,34,809. இதில் நூலக உறுப்பினர்கள் 4% தான், இதை வருகிற ஆண்டில் 5% அளவுக்காவது உயர்த்த வேண்டும். அதாவது உறுப்பினர் களைச் சேர்க்க வேண்டும். படித்தவர்கள் ஒத்துழைத்து உறுப்பினராக வேண்டும்.

இம்மாவட்டத்தில் நூலக உறுப்பினர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்த நூல்கள் 5,83,228. இதன்படி ஆண்டு ஒன்றுக்கு ஒரு உறுப்பினர் 9 நூல்கள்தான் படித்துள்ளார். இது போதாது. மேலும் நூல்கள் படிக்க ஊக்க வேண்டும்.

6 விழாக்கள்

61 தேசிய நூலக வார விழா

ஆண்டு தோறும் நவம்பர் 14-ம் தேதி முதல் 20-ம் தேதி வரையிலும் மைய நூலகம் மற்றும் கிளை நூலகங்களில் தேசிய நூலக வார விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தக் காலத்தில் மக்கள் நூல் கொடை தந்து, உறுப்பினராக வேண்டுகிறோம்.

62 நூல்கள் அறிமுக விழா

1977 ஏப்ரல் தொடங்கி மாவட்ட மைய நூலகத்திலும், கிளை நூலகங்களிலும் வாசகர் ஆர்வத்திற்கு ஏற்ப மாதந் தோறும் புதிய நூல்களைக் காட்சிக்கு வைப்பதுடன் அறி ஞர்களைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. இம் முறையில் நூல்கள் அறிமுகக் கருத்தரங்குகள் இம் மாவட்டத்தில் நவம்பர் 80 முடிய 97 நடத்தப்பட்டுள்ளது.

7 காசுக் கணக்கு

1979-80ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் நூலக வளர்ச்சிக்கென மொத்தம் ரூ. 24,03,985.21 செல வழிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு நூலகத்திற்குச் சராசரி ரூ 19,232/- செலவு செய்யப்பட்டுள்ளது. ஒரு வாசகருக்கென செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1.05ம், ஒரு உறுப்பி னர்க்கென செலவு செய்யப்பட்ட தொகை ரூ 38ம் ஆகும்.

8 மாவட்ட நூலக அலுவலர்

திருநெல்வேலி மாவட்ட நூலக அலுவலராக திரு வே. மோகன்தாஸ் முருகேசன், பி. காம்., பி. எல். எஸ். 3-1-1977 முதல் 31-12-80வரை பணியாற்றினார்.

9 பணிவிவரம்—பக்கம் 30ல் காண்க.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் நூலகப்பணி

1 கவிமணி நூல் நிலையம்

11 மறைந்த கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களின் நினைவை நிலை நிறுத்தும் பொருட்டு கவிமணி நினைவுக்குழு அழியாச் சின்னம் ஒன்று நிறுவத் திட்டமிட்டது. அம்முயற்சியின் பயனாக நாகர்கோவில் வடசேரியில் 26 சென்ட் பரப்புள்ள நிலப் பகுதியில் பொது மக்கள் நன்கொடையில் ரூ 40,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்று கட்டப்பட்டது.

12 கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்களால் சேகரிக்கப்பட்ட நூல்கள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கவிமணி நூல் நிலையம் நல்ல முறையில் இயங்க கவிமணி நினைவுக்குழு நூலக இடத்தையும், நூல்களையும் 1966ம் ஆண்டு தமிழக அரசுக்கு நன்கொடையாக அளித்துள்ளது.

13 கவிமணி நூலகக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ரூ. 40,000- அனுமதித்துள்ளது. கட்டடத்தை சீர் செய்யும் பணி பொதுப் பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

14 கவிமணி நூலகம் தற்பொழுது 8,470 நூல்களைக் கொண்டு குறிப்புதவி நூலகமாக (Reference library) செயல்பட்டு வருகிறது. வேலை நேரம் காலை 10.30 முதல் மாலை 5.30மணிவரை.

15 கவிமணி நூலகத்தை பொது மக்கள் மேலும் நன்கு பயன்படுத்திக்கூடுதல் பயன்பெற, வாசகர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து நூல்களை எடுத்துச் செல்லவும், நாளிதழ்கள், பருவ இதழ்கள் பகுதி ஏற்படுத்தவும், கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டுள்ளன.

## 2 உதவி பெறும் நூலகங்கள்

21 திருவாங்கூர்—கொச்சி மாநிலத்திலிருந்து குமரி மாவட்டம் 1956ம் ஆண்டில் தமிழகத்துடன் இணைந்த பகுதியாதலால் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் இப்பகுதியில் செயல் படுத்தப்படவில்லை. அரசு உதவி பெறும் 136 நூலகங்கள் குமரி மாவட்ட மக்களுக்கு நூலகத் தொண்டு புரிந்து வருகின்றது.

22 உதவி பெறும் நூலகங்களுக்கு, நூலகத்தில் உள்ள நூல்களின் அடிப்படையில் அரசு உதவித் தொகை நிர்ணயித்துள்ளது.

| | நூல்களின் எண்ணிக்கை | உதவித்தொகை |
|---|---|---|
| 1 | 600 வரை | ரூ. 100 |
| 2 | 600 முதல் 1,200 வரை | ரூ. 140 |
| 3 | 1,200 முதல் 2,000 வரை | ரூ. 200 |
| 4 | 2,000 முதல் 2,500 வரை | ரூ. 250 |
| 5 | 2,500 முதல் 3,500 வரை | ரூ. 350 |
| 6 | 3,500 முதல் 5,000 வரை | ரூ. 500 |

23 தற்பொழுது அரசு உதவிக்கு தகுதி பற்றி திருநெல்வேலி மாவட்ட நூலக அலுவலர் நூலகங்களை ஆய்வு செய்து மானியத்திற்கு பரிந்துரை செய்கின்றார். அப்பரிந்துரையின் பேரில் பொது நூலக இயக்குநரால் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையில் குறைந்தது எழுபத்தைந்து விழுக்காடு நூல்கள் வாங்கப் பயன்படுத்தப்படுகிறது.

## 3 நூலகச் சட்ட நீடிப்பு

தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை இம்மாவட்டத்தில் செயல்படுத்தும் திட்டம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## பணிமுனைச் செய்திகள் 1979—80.

| வ. எண். | பணிமுனை | திறந்த நாள் | நூல் இருப்பு | வாசகர்கள் | படித்த நூல்கள் | உறுப்பினர்கள் | கடன்கொடுத்த நூல்கள் | மொத்தம் பயன்பட்ட நூல்கள் | ஊழியர்கள் | செலவு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1. | மாவட்டமைய நூலகம் | 7- 5-52 | 41,021 | 91,980 | 29,005 | 4,866 | 74,347 | 10,3,352 | 12 | 62,555 |
| 2. | நான்குனேரி | 22- 3-54 | 9,454 | 38,990 | 4,992 | 745 | 10,714 | 15,706 | 2 | 12,239 |
| 3. | சுரண்டை | 28- 3-54 | 5,317 | 16,756 | 1,359 | 475 | 4,921 | 6,280 | 2 | 10,913 |
| 4. | தூத்துக்குடி கீழூர் | 27-11-54 | 13,354 | 72,094 | 12,151 | 2,172 | 17,699 | 29,850 | 4 | 19,775 |
| 5. | சேரன்மகாதேவி | 28- 3-55 | 9,108 | 26,014 | 4,782 | 661 | 6,389 | 11,171 | 2 | 11,767 |
| 6. | தச்சநல்லூர் | 30- 3-55 | 5,401 | 22,753 | 1,587 | 395 | 3,754 | 5,341 | 2 | 12,668 |
| 7. | விசுவநாதப்பேரி | 30- 3-55 | 4,824 | 14,067 | 1,738 | 375 | 3,010 | 4,748 | 2 | 10,528 |
| 8. | திருநெல்வேலி நகர் | 1- 5-55 | 15,911 | 53,435 | 3,721 | 2,165 | 8,732 | 12,453 | 4 | 21,608 |
| 9. | திருநெல்வேலி சந்திப்பு | 1- 5-55 | 10,796 | 43,848 | 2,295 | 1,049 | 12,120 | 14,415 | 2 | 15,864 |
| 10. | பேட்டை | 1- 5-55 | 7,491 | 41,827 | 6,273 | 615 | 11,001 | 17,274 | 2 | 12,685 |
| 11. | உடன்குடி | 17- 5-56 | 5,734 | 26,921 | 5,835 | 654 | 6,863 | 12,698 | 2 | 10,537 |
| 12. | கருங்குளம் | 10-10-56 | 4,487 | 19,388 | 734 | 459 | 3,133 | 3,867 | 2 | 10,530 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரூ. |
| 13. | கடம்பூர் | 10-10-56 | 5,105 | 21,297 | 3,144 | 486 | 4,728 | 7,872 | 2 | 11,144 |
| 14. | பரமன் குறிச்சி | 26-10-56 | 5,389 | 23,810 | 991 | 595 | 3,683 | 4,674 | 2 | 11,915 |
| 15. | ஆழ்வார்குறிச்சி | 27- 3-57 | 6,798 | 23,132 | 3,512 | 515 | 6,219 | 9,731 | 2 | 12,120 |
| 16. | அரசூர்பூச்சிக்காடு | 27- 3-57 | 4,029 | 5,317 | 320 | 404 | 1,471 | 1,791 | 1 | 6,026 |
| 17. | ஏரல் | 27- 3-57 | 5,919 | 22,958 | 2,386 | 641 | 6,848 | 9,234 | 2 | 10,642 |
| 18. | கீழப்பாவூர் | 27- 3-57 | 3,792 | 15,487 | 325 | 354 | 3,010 | 3,335 | 1 | 5,235 |
| 19. | கடையம் | 27- 3-57 | 5,099 | 10,596 | 1,511 | 429 | 5,332 | 6,843 | 2 | 10,469 |
| 20. | கோவில்பட்டி | 27- 3-57 | 10,540 | 39,600 | 5,265 | 1,464 | 16,580 | 21,845 | 2 | 14.644 |
| 21. | பணகுடி | 27- 3-57 | 4,502 | 10,773 | 2,089 | 539 | 3,096 | 5,185 | 2 | 10,586 |
| 22. | இலஞ்சி | 2- 8-57 | 6,592 | 15,383 | 2,516 | 414 | 4,771 | 7,287 | 2 | 10,272 |
| 23. | சங்கரன் கோவில் | 5- 3-58 | 9,885 | 29,498 | 5,067 | 1,033 | 10,901 | 15,968 | 2 | 13,270 |
| 24. | வீரசிகாமணி | 27- 3-58 | 5,396 | 42,480 | 6,518 | 523 | 9,029 | 15,547 | 3 | 13,758 |
| 25. | இடைகால் | 27- 3-58 | 4,119 | 13,792 | 1,080 | 564 | 5,448 | 6,528 | 3 | 10,222 |
| 26. | முக்கூடல் | 27- 3-58 | 4,556 | 17,254 | 3,600 | 542 | 4,281 | 7,881 | 3 | 13,716 |
| 27. | நாரணம்மாள்புரம் | 27- 3-58 | 4,081 | 11,442 | 5,318 | 190 | 2,315 | 7,633 | 3 | 14,682 |
| 28. | சீவலப்பேரி | 27- 3-58 | 4,686 | 19,128 | 795 | 409 | 2,680 | 3,475 | 3 | 15,104 |
| 29. | பெருங்குளம் | 27- 3-58 | 5,355 | 18,770 | 1,389 | 710 | 7,185 | 8,574 | 3 | 14,983 |
| 30. | மானாடுதண்டபத்து | 27- 3-58 | 4,244 | 6,698 | 364 | 241 | 1,851 | 2,215 | 3 | 14,542 |
| 31. | கயத்தார் | 27- 3-58 | 4,654 | 12,040 | 2,654 | 371 | 3,559 | 6,213 | 3 | 14,225 |
| 32. | கழுகுமலை | 27- 3-58 | 4,252 | 11,218 | 1,021 | 535 | 1,913 | 2,934 | 3 | 14,174 |
| 33. | புலியூர்குறிச்சி | 27- 3-58 | 3,689 | 11,055 | 1,151 | 483 | 1,388 | 2,539 | 3 | 14,535 |


| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரூ. |
| 34. | கரிவலம்வந்தநல்லூர் | 27– 3-58 | 3,877 | 14,485 | 1,157 | 335 | 2,661 | 3,818 | 1 | 5,785 |
| 35. | உக்கிரன்கோட்டை | 27– 3-58 | 3,873 | 2,061 | — | 1,175 | 387 | 387 | 1 | 5,014 |
| 36. | புதூர் | 27– 3–58 | 4,261 | 13,607 | 816 | 412 | 1,595 | 2,411 | 1 | 5,167 |
| 37. | நெல்கட்டும்செவல் | 27– 3-58 | 3,184 | 1,292 | 241 | 116 | 299 | 540 | 1 | 5,050 |
| 38. | முடிவைத்தானேந்தல் | 27- 3–58 | 3,903 | 32,388 | 32,427 | 385 | 3,641 | 7,068 | 2 | 12,035 |
| 39. | களக்காடு | 27– 3–58 | 6,105 | 31,244 | 3,129 | 631 | 8,417 | 11,546 | 2 | 11,522 |
| 40. | கங்கைகொண்டான் | 27- 3–58 | 4,324 | 17,687 | 1,319 | 361 | 2,233 | 3,552 | 2 | 10,817 |
| 41. | மேலப்பாளையம்–1 | 22- 5–59 | 6,276 | 20,568 | 1,728 | 629 | 4,752 | 6,480 | 2 | 11,999 |
| 42. | அம்பாசமுத்திரம் | 15– 9–59 | 7,155 | 37,333 | 1,993 | 900 | 13,633 | 15,526 | 3 | 15,827 |
| 43. | இராயகிரி | 15– 9–59 | 2,730 | 10,174 | 1,466 | 282 | 2,779 | 4,245 | 3 | 13,418 |
| 44. | ஏர்வாடி | 1– 9-60 | 3,486 | 13,739 | 1,461 | 549 | 3,523 | 4,984 | 3 | 14,535 |
| 45. | குலசேகரப்பட்டிணம் | 1- 9–60 | 4,064 | 12,033 | 561 | 492 | 4,162 | 4,723 | 3 | 10,058 |
| 46. | ஆழ்வார்திருநகரி | 9– 1–61 | 5,242 | 27,434 | 2,864 | 658 | 8,245 | 11,109 | 2 | 10,991 |
| 47. | குருவிகுளம் | 1- 5-61 | 5,286 | 12,452 | — | 281 | 1,873 | 1,873 | 2 | 9,203 |
| 48. | ஸ்ரீவைகுண்டம் | 16–10-61 | 8,715 | 35,566 | 2,657 | 866 | 6,411 | 9,068 | 2 | 13,444 |
| 49. | கல்லிடைக்குறிச்சி | 16–10-61 | 5,150 | 26,373 | 2,180 | 607 | 5,529 | 7,709 | 2 | 10,313 |
| 50. | கடையநல்லூர் | 16-10-61 | 6,081 | 35,744 | 8,021 | 834 | 9,942 | 17,963 | 2 | 12,624 |
| 51. | தென்காசி | 16–10-61 | 9,454 | 30,916 | 4,338 | 1,019 | 8,482 | 12,820 | 3 | 14,558 |
| 52. | எட்டையாபுரம் | 16-10-61 | 3,453 | 9,551 | 1,196 | 325 | 1,721 | 2,917 | 3 | 13,636 |
| 53. | புலியங்குடி | 16-10–61 | 5,608 | 29,402 | 5,668 | 699 | 6,026 | 11,694 | 3 | 12,323 |
| 54. | வள்ளியூர் | 16-10–61 | 4,100 | 22,652 | 1,106 | 587 | 4,774 | 5,880 | 3 | 14,945 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரூ. |
| 55. | திருச்செந்தூர் | 19- 1-62 | 6,364 | 42,398 | 6,470 | 745 | 9,566 | 16,036 | 3 | 14,671 |
| 56. | குற்றாலம் | 21- 1-62 | 5,755 | 11,341 | 1,100 | 382 | 2,528 | 3,628 | 2 | 11,121 |
| 57. | தூத்துக்குடி மேலூர் | 5- 4-62 | 5,854 | 60,615 | 12,096 | 715 | 12,783 | 24,879 | 2 | 13,161 |
| 58. | ஓட்டப் பிடாரம் | 21- 6-62 | 3,349 | 19,407 | 1,354 | 345 | 3,092 | 4,446 | 3 | 11,839 |
| 59. | இடையங்குடி | 26- 7-62 | 3,294 | 11,588 | 867 | 484 | 2,270 | 3,137 | 3 | 9,155 |
| 60. | விக்கிரம சிங்கபுரம் | 29- 7-62 | 4,017 | 35,667 | 3,926 | 902 | 7,197 | 11,123 | 3 | 13,321 |
| 61. | ஆறுமுகனேரி | 7- 8-62 | 2,779 | 15,311 | 1,301 | 582 | 4,826 | 6,127 | 3 | 14,109 |
| 62. | சாயர்புரம் | 27- 8-62 | 3,030 | 8,460 | 821 | 321 | 1,506 | 2,327 | 3 | 13,461 |
| 63. | மடத்துப்பட்டி | 15-11-62 | 2,777 | 10,109 | 597 | 495 | 3,833 | 4,430 | 3 | 13,565 |
| 64. | வடகரை | 30- 1-63 | 2,756 | 10,560 | 1,538 | 418 | 2,144 | 3,682 | 3 | 14,596 |
| 65. | சிவகிரி | 10-10-64 | 3,193 | 16,742 | 4,285 | 328 | 4,027 | 8,312 | 3 | 14,127 |
| 66. | காயல்பட்டிணம் | 10-10-64 | 4,030 | 22,396 | 5,170 | 742 | 5,533 | 10,703 | 3 | 13,756 |
| 67. | விளாத்திகுளம் | 10-10-64 | 4,728 | 20,593 | 3,219 | 527 | 6,307 | 9,526 | 3 | 14,366 |
| 68. | சொக்கம்பட்டி | 28-10-64 | 2,581 | 17,029 | 1,316 | 233 | 1,616 | 2,932 | 3 | 14,655 |
| 69. | இராதாபுரம் | 28-10-64 | 3,091 | 15,182 | 2,087 | 453 | 2,676 | 4,763 | 3 | 13,123 |
| 70. | முலைக்கரைப்பட்டி | 28-10-64 | 2,949 | 16,167 | 2,606 | 418 | 2,972 | 5,578 | 3 | 14,752 |
| 71. | செய்துங்கநல்லூர் | 11-11-64 | 3,032 | 12,669 | 930 | 565 | 1,834 | 2,764 | 3 | 14,078 |
| 72. | நாசரேத் | 11-11-64 | 4,831 | 19,302 | 1,366 | 731 | 5,930 | 7,296 | 3 | 14,931 |
| 73. | வீரவநல்லூர் | 11-11-64 | 4,350 | 23,384 | 2,366 | 554 | 6,777 | 9,143 | 3 | 14,924 |
| 74. | வாசுதேவநல்லூர் | 12-11-64 | 3,514 | 27,004 | 389 | 449 | 1,966 | 2,355 | 3 | 13,794 |
| 75. | முள்ளிகுளம் | 30- 6-65 | 3,244 | 7,369 | 1,203 | 186 | 1,229 | 2,432 | 2 | 11,409 |


| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரூ. |
| 76. | முதலூர் | 30– 6–65 | 2,927 | 12,403 | 1,102 | 390 | 1,936 | 3,038 | 2 | 10,360 |
| 77. | வண்ணார்பேட்டை | 3– 7–65 | 4,326 | 20,123 | 3,383 | 632 | 4,649 | 8,032 | 2 | 11,476 |
| 78. | தூத்துக்குடி துறைமுகம் | 1– 9–65 | 3,610 | 23,817 | 1,171 | 400 | 6,787 | 7,958 | 2 | 10,851 |
| 79. | பத்தமடை | 15–11–65 | 4,117 | 17,024 | 1,741 | 440 | 2,688 | 4,429 | 2 | 10,648 |
| 80. | இட்டமொழி | 15–11–65 | 2,952 | 9,342 | 1,750 | 363 | 2,753 | 4,503 | 2 | 10,514 |
| 81. | வடக்கன்குளம் | 15–11–65 | 2,838 | 19,980 | 2,274 | 576 | 3,528 | 5,802 | 2 | 11,548 |
| 82. | முனைஞ்சிப்பட்டி | 18– 2–66 | 2,836 | 12,325 | 909 | 357 | 3,244 | 41,53 | 2 | 11,248 |
| 83. | ஆலங்குளம் | 28– 3–66 | 3,363 | 7,490 | 1,309 | 368 | 2,654 | 3,954 | 2 | 10,601 |
| 84. | ஊத்துமலை | 17– 3–66 | 2,838 | 975 | 99 | 360 | 1,818 | 1,917 | 2 | 10,209 |
| 85. | திசையன்விளை | 28– 3–66 | 2,944 | 26,686 | 394 | 474 | 3,386 | 3,780 | 1 | 5,325 |
| 86. | கடங்குளம் | 28– 3–66 | 2,061 | 8,085 | 772 | 178 | 894 | 1,666 | 1 | 5,592 |
| 87. | குளத்தூர் | 28– 3–66 | 2,024 | 2,925 | 292 | 209 | 1,178 | 1,470 | 1 | 5,010 |
| 88. | வல்லநாடு | 28– 3–66 | 2,186 | 14,147 | 1,232 | 217 | 1,819 | 3,051 | 1 | 4,817 |
| 89. | தூத்துக்குடி வடக்கு | 28– 3–66 | 2,359 | 18,692 | 8,613 | 294 | 3,402 | 12,015 | 1 | 5,905 |
| 90. | மேலப்பாளையம்–2 | 28– 3–66 | 2,623 | 19,325 | 449 | 320 | 4,409 | 4,858 | 1 | 5,691 |
| 91. | இரவணசமுத்திரம் | 28– 3–66 | 2,247 | 15,161 | 2,575 | 295 | 4,335 | 6,910 | 1 | 4,707 |
| 92. | காயாமொழி | 28– 3–66 | 2,052 | 8,281 | 501 | 270 | 1,539 | 2,040 | 1 | 4,924 |
| 93. | திப்பணம்மட்டி | 28– 3–66 | 2,069 | 6,034 | 185 | 204 | 2,028 | 2,213 | 1 | 5,355 |
| 94. | சுந்தரபாண்டியபுரம் | 30– 3–66 | 2,602 | 8,082 | 296 | 264 | 1,870 | 2,166 | 1 | 5,113 |
| 95. | வேங்கடம்பட்டி | 30– 3–66 | 1,932 | 5,692 | 772 | 214 | 2,041 | 2,813 | 1 | 5,010 |
| 96. | திருக்குறுங்குடி | 30– 3–66 | 2,167 | 14,581 | 1,281 | 302 | 3,568 | 4,849 | 1 | 4,154 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரூ. |
| 97. | மணிமுத்தாறு | 1-10-66 | 2,098 | 8,966 | 552 | 205 | 1,747 | 2,299 | 1 | 5,356 |
| 98. | தென்திருப்பேரை | 1-10-66 | 2,239 | 16,472 | 2,319 | 255 | 2,412 | 4,731 | 1 | 5,391 |
| 99. | பண்பொழி | 1-10-66 | 2,634 | 10,110 | 2,134 | 432 | 1,217 | 3,351 | 1 | 5,1276 |
| 100. | பெருமாள்புரம் பெண்கள் நூலகம் | 1-10-66 | 1,734 | 3,900 | 470 | 179 | 1,616 | 2,086 | 1 | 4,602 |
| 101. | சிறுவர்கள் நூலகம் பாளையங்கோட்டை | 7-10-66 | 1,994 | 19,603 | 3,569 | 216 | 2,763 | 6,332 | 1 | 5,277 |
| 102. | சேர்ந்தமரம் | 19- 3-67 | 2,494 | 17,616 | 3,075 | 241 | 2,634 | 5,709 | 2 | 10,596 |
| 103. | குமாரகிரிப் புதுக்கோட்டை | 19- 3-67 | 2,575 | 7,125 | 585 | 275 | 1,027 | 1,612 | 2 | 9,943 |
| 104. | கரைச்சுத்துப் புதூர் | 19- 3-67 | 2,489 | 7,175 | 676 | 189 | 893 | 1,569 | 2 | 11,090 |
| 105. | செக்காரக்குடி | 22-3-68 | 1,986 | 4,190 | 773 | 192 | 823 | 1,596 | 1 | 4,995 |
| 106. | வீரகேரளம்புதூர் | 23-3-68 | 2,161 | 6,460 | 613 | 177 | 1,416 | 2,029 | 1 | 4,832 |
| 107. | பண்டாரபுரம் | 24-3-68 | 1,939 | 4,954 | 306 | 189 | 1,566 | 1,872 | 1 | 5,080 |
| 108. | கோபாலசமுத்திரம் | 28-3-68 | 2,306 | 9,159 | 401 | 151 | 825 | 1,226 | 1 | 5,206 |
| 109. | தென்மலை | 30-3-68 | 1,664 | 10,238 | 407 | 157 | 1,434 | 1,841 | 1 | 4,702 |
| 110. | காணம் | 7-3-69 | 1,569 | 7,323 | 1,529 | 274 | 6,121 | 7,650 | 1 | 5,041 |
| 111. | புதியம்புத்தூர் | 7-3-69 | 1,962 | 7,300 | 310 | 122 | 1,195 | 1,505 | 1 | 4,839 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரூ. |
| 112. | பாப்பாக்குடி | 12-3-69 | 1,680 | 10,235 | 780 | 118 | 914 | 1,694 | 1 | 4,631 |
| 113. | விஜய்நாராயணம் | 8-3-69 | 1,845 | 8,621 | 808 | 59 | 351 | 1,159 | 1 | 4,828 |
| 114. | ரெட்டியார்பட்டி | 24-3-69 | 1,859 | 10,053 | 1,658 | 180 | 2,460 | 4,118 | 1 | 4,806 |
| 115. | பாரதியார் தெரு திருநெல்வேலிநகர் | 15-3-70 | 2,492 | 20,657 | 5,481 | 218 | 2,211 | 7,692 | 1 | 4,942 |
| 116. | ஆத்தூர் | 16-3-70 | 1,975 | 32,467 | 1,030 | 278 | 3,998 | 5,028 | 1 | 5,352 |
| 117. | செட்டிகுளம் | 18-3-70 | 1,576 | 1,977 | 11 | 99 | 488 | 499 | 1 | 4,859 |
| 118. | சிங்கம்பட்டி | 19-3-70 | 1,527 | 1,344 | 171 | 100 | 381 | 552 | 1 | 4,802 |
| 119. | திருவேங்கடம் | 20-3-70 | 1,894 | 5,758 | — | 193 | 2,202 | 2,202 | 1 | 5,421 |
| 120. | மகாராஜநகர் | 15-3-70 | 2,393 | 11,583 | 1,147 | 292 | 3,995 | 5,142 | 2 | 10,780 |
| 121. | படுக்கப்பத்து | 16-3-70 | 2,495 | 12,278 | 795 | 452 | 3,199 | 3,994 | 2 | 9,730 |
| 122. | கொம்மடிக்கோட்டை | 16-3-70 | 2,265 | 6,113 | 1,312 | 334 | 3,179 | 4,491 | 2 | 11,185 |
| 123. | லெவிஞ்சிபுரம் | 18-3-70 | 1,803 | 6,188 | 1,423 | 124 | 2,260 | 3,683 | 2 | 9,962 |
| 124. | பொட்டல்புதூர் | 19-3-70 | 2,092 | 13,941 | 2,687 | 358 | 4,271 | 6,968 | 2 | 11,319 |
| 125. | சிதம்பரநகர் | 21-3-70 | 3,197 | 13,413 | 2,356 | 355 | 3,906 | 6,262 | 2 | 12,028 |




திருநெல்வேலி இயங்கும் நூலகம்



திருநெல்வேலி மாவட்ட மைய நூலகம்